From-39

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 188 /2010

Deposition of witness for: PW - 6

| | | | |
|---|---|---|---|
| Name | : Krishnan | Father/Husband Name | : Mayan |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 19.10.2020 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2020.

முதல் விசாரணை:

நான் தற்போது தமிழ்நாடு காவல்துறையில் சிறப்பு சார்பு ஆய்வாளாராக பணிபுரிந்து ஓய்வுபெற்றுவிட்டேன். நான் மட்டங்கிபட்டியில் வசித்து வருகிறேன். கடந்த 05.01.2010ம் தேதி 13 மணிக்கு மேலூர் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியிலிருந்தபோது மேலூர் அரசு காவலர் குடியிருப்பில் குடியிருந்த மல்லிகாபுலோராவதி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரைப்பெற்று மேலூர் காவல் நிலைய குற்ற எணஂ. 17/10 இதச பிரிவு 392-ன்படி வழக்கு பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகும். வாதியின் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையின் அசலையும் நீதிமனற்த்திற்கு அனுப்பி வைத்தேன். மற்ற நகல்களை புலன்விசாரணை அதிகாரிக்கும் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை:

வழக்கின் புகார்தாரரின் மகள் மேலவளவு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தார் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் எதிரிகளை குறித்து எந்தவிதமான தகவல்களும் குறிப்பிடவில்லை என்றால் இரண்டுபேர் என்று மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் சொன்ன மாதிரி நேரத்தில், விதத்தில் எந்தவிதமான சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், சொன்ன மாதிரி எந்தவிதமான புகாரும் கொடுக்கவில்லை என்றாலும், பின்னிட்டு கையெழுத்து பெற்றுக்கொண்டு புகார்தாரரின் மகள் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்ததால் அவருக்கு சாதகமாக பொய்யாக வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.